# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊழியர்களுக்கான சீருடை மற்றும் சீருடைத் துணிகளின் பெறுகை

## கேள்வி இல : PR/02/11-03

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊழியர்களுக்கு சீருடைகள் மற்றும் சீருடைத் துணிகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனு ஆவணங்களில் தேவைப்பாட்டின் முழுமையான விபரங்கள் மற்றும் துணிகளின் விபரக் குறிப்புகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

| | உருப்படி விபரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 1. | காற்சட்டை துணி (மூன்று ஊழியர் வகுதிகள்) | 2125 மீற்றர்கள் |
| 2. | சேர்ட் - நீண்ட கை (இரண்டு ஊழியர் வகுதிகள்) | 1662 |
| 3. | சேர்ட் - அரைக்கை (ஒரு ஊழியர் வகுதி) | 888 |
| 4. | ரவிக்கை துணி சகிதமான சாரிகள் (மூன்று ஊழியர் வகுதிகள்) | 3384 |

வேலையின் நோக்கம்

விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் அட்டவணை மற்றும் விவரக்குறிப்புகளின் படி சீருடை துணிகள் மற்றும் அணியத் தயாராக உள்ள சீருடைகளை வழங்குதல்.

1. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் பிரகாரம் விலைக்கோரல்கள் இடம்பெறும்.

02. சித்திகரமான விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் 120 நாட்களுக்குள் பெறுகையை நிறைவு செய்ய வேண்டும்.

03. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் நூற்றியிருபது (120) நாட்காட்டி நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக பின்வரும் குறைந்தபட்ச தகுதித் தேவைப்பாடுகளை விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் கொண்டிருக்க வேண்டும்.
மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

(அ) விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் 6 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருக்க வேண்டும். விலைமனுதாரர் எந்தவொரு அரசாங்க அமைப்பினாலும் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருக்க வேண்டும்.

(ஆ) விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் (2019-2024) இதனையொத்த குறைந்தபட்சம் 2 திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தும் / செயற்படுத்திய அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த வகையான ஒரு திட்டத்தின் குறைந்தபட்ச பெறுமதி 15 மில்லியன் இலங்கை ரூபாவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். (சான்றுகளை விலைமனு ஆவணத்துடன் வழங்க வேண்டும்)

(இ) விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் குறைந்தபட்ச சராசரி வருடாந்த புரள்வாக இருநூறு மில்லியன் (200 மில்லியன் இல. ரூபா) இலங்கை ரூபாவைக் கொண்டிருக்க வேண்டும். (சான்றுகளை விலைமனு ஆவணத்துடன் வழங்க வேண்டும்)

(ஈ) விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் தயாரிக்கும் உற்பத்தியாளர் அல்லது அவர்களின் உள்நாட்டு முகவர் அங்கீகாரக் கடிதத்தைச் சமர்ப்பிக்கும் இயலுமையைக் கொண்டிருக்க வேண்டும். (மாதிரிக் கடித வடிவம் விலைமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.)

05. தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2025-07-14ஆம் திகதி முதல் 2025-08-03ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 2ஆம் மாடி, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனுதாரர்கள் 2025-07-14ஆம் திகதி முதல் 2025-08-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
தொலைபேசி: 011-2887585 மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத முப்பதாயிரம் இலங்கை ரூபாவைச் (30,000.00 இல. ரூபா) செலுத்தி 2025-07-14ஆம் திகதி முதல் 2025-08-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 2ஆம் மாடி, பெறுகைப் பிரிவு, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவருக்கு நிறுவனக் கடிதத் தலைப்பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாக மட்டுமேயாகும்.

விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் தமது வேண்டுகோள் சகிதம் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப் பிரதியுடன் நகல் பிரதியொன்றை விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

07. விலைமனுக்கள் 2025-08-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

**தலைவர்**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011 2887550 / 011 2880564**
**மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk**

அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.